பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை - 4

22 08-2025 FRIDAY 6.30 PM

## மாநிலச் செய்திகள்
## தலைப்புச் செய்திகள்

1. ஊழலை முற்றிலும் அகற்ற வேண்டும் என்ற நோக்கில் அரசியல் சாசன திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. திமுக ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

3. மாநில கல்விக்கொள்கையில் தொழில்நுட்ப கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

4. செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Elavenil Valarivan தங்கப்பதக்கம் வென்றார்.

--- இனி விரிவான செய்திகள் –

<<<<<<>>>>>

ஊழலை முற்றிலும் அகற்ற வேண்டும் என்ற நோக்கில் அரசியல் சாசன திருத்த மசோதா கொண்டுவரப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

பீகார் மாநிலத்தில் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

இந்த மசோதாவிற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் கட்சிகளின் தலைவர்கள் சிறைச்சாலையிலோ அல்லது ஜாமினில் விடுவிக்கப்பட்டவர்களாகவோ உள்ளனர் என்று அவர் தெரிவித்தார்.

குற்ற வழக்குகளில் கைது செய்யப்பட்டு 30 நாட்களுக்கு மேல் சிறையில் இருந்தால் அவர்களை பதவிநீக்கம் செய்ய இந்த அரசியல் சாசன திருத்த மசோதாவில் வகை செய்யப்பட்டிருப்பதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

<<<<<<<>>>>>>

திமுக ஆட்சியில் அனைத்துத்துறைகளிலும் ஊழல் அதிகரித்துள்ளதாக மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

இன்று நெல்லையில் நடைபெற்ற குமரி மண்டலத்திற்கான பிஜேபி வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் உரையாற்றினார்.

திமுக அரசுக்கு எதிரான ஊழல் குற்றச்சாட்டுகளையும் அவர் பட்டியலிட்டார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில், தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இது அரசியல் கூட்டணி அல்ல என்றும், தமிழகத்தின் வளர்ச்சிக்கான கூட்டணி என்றும் அவர் கூறினார்.

தமிழகத்தின் வளர்ச்சி மற்றும் தமிழர்களின் நலனில் பிரதமர் திரு நரேந்திர மோடி தனி அக்கறை கொண்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

குடியரசு துணைத்தலைவர் பதவிக்கு தமிழகத்தை சேர்ந்த திரு சி பி ராதாகிருஷ்ணனை, தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக அறிவித்ததற்காக பிரதமர் திரு நரேந்திர மோடி மற்றும் பிஜேபி தலைவர் திரு ஜெ பி நட்டாவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்வதாக திரு அமித் ஷா கூறினார்.

இந்த நிகழ்ச்சியில் பேசிய பிஜேபி மாநிலத்தலைவர் திரு நயினார் நாகேந்திரன், மக்கள் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு பிஜேபி செயல்படுவதாக கூறினார்.

திமுக-வை பொறுத்தவரை குடும்ப கட்சியாக செயல்படுவதாகவும் அவர் குற்றம் சாட்டினார்.

தேர்தல் நேரத்தில் அளித்த வாக்குறுதிகளை திமுக அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் குறை கூறினார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றிபெறும் என்றும் திரு நயினார் நாகேந்திரன் நம்பிக்கை தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

பாதுகாப்புத்துறை இணையமைச்சர் திரு சஞ்சய் சேத் சென்னையில் உள்ள அதிகாரிகள் பயிற்சி மையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

இந்த மையத்தில் உள்ள கட்டமைப்பு வசதிகள் குறித்து அவரிடம் எடுத்துரைக்கப்பட்டதாக பாதுகாப்புத்துறையின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இந்த ஆய்வின்போது, பயிற்சி வழங்கும் அதிகாரிகளின் சிறப்பான செயல்பாடுகளுக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்ததாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான இலக்குகளை எட்டுவதற்கு இஸ்ரோ முழு பங்கினை அளிக்கும் என்று அதன் தலைவர் திரு நாராயணன் கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விண்வெளித்துறையில் இந்தியா தொடர்ந்து சாதனைகளை படைத்து வருவதாக கூறினார்.

குரூப் கேப்டன் சுபான்ஷு சுக்லாவின் சர்வதேச விண்வெளி ஆய்வு மையத்திற்கான வெற்றிப்பயணம் இஸ்ரோ சாதனையில் மேலும் ஒரு மைல்கல்லாகும் என்றும் திரு நாராயணன் தெரிவித்தார்.

<<<<<<>>>>>>

உற்பத்திக்கான இந்தியா இயக்கத்தின்கீழ் *Chip-* வடிவமைப்பிற்கான ஐந்து திட்டங்களுக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

உள்நாட்டிலேயே *Chip-* வடிவமைப்பிற்கு ஊக்கம் அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பதாக மத்திய அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

<<<<<<>>>>>

மாநில கல்விக்கொள்கையில் தொழில்நுட்ப கல்விக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாக தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு பி டி ஆர் பழனிவேல் தியாகராஜன் கூறியுள்ளார்.

சென்னை ஐ ஐ டி ஆராய்ச்சி பூங்காவில் செயற்கை நுண்ணறிவு தளத்தை தொடங்கிவைத்து அவர் பேசினார்.

செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தின் பயன்பாடு கல்வித்துறையில் மிகப்பெரும் மாற்றங்களை கொண்டுவரும் என்றும் அவர் கூறினார்.

இந்த தொழில்நுட்ப வாய்ப்புகளை மாணவர்கள் முழுமையாக பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<<>>>>>

போதைப்பொருள் கடத்தலை தடுப்பதில் தமிழகம் முன்னணியில் உள்ளதாக காவல்துறை தலைவர் திரு சங்கர் ஜிவால் கூறியுள்ளார்.

இதுதொடர்பாக இன்று அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இதுதொடர்பான வழக்குகளில் ஈடுபட்டவர்களின் சொத்துக்கள் மற்றும் வங்கிக்கணக்குகள் கடந்த மூன்றாண்டுகளாக முடக்கப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ளார்.

<<<<<<>>>>>

செங்கல்பட்டு, காஞ்சிபுரம் உள்ளிட்ட ஒன்பது மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த 24 மணிநேரத்தில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

*(Sound Byte – செந்தாமரை கண்ணன் - 61 Sec. )*

<<<<<<>>>>>>

தேசிய அளவிலான சமையல் கலை போட்டி ஓசூரில் நடைபெற்றது.

நாடு முழுவதும் இருந்து நூற்றுக்கும் மேற்பட்ட சமையல் கலை மாணவர்கள் இதில் பங்கேற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

*(Voice Byte – ராஜா – 30 Sec. )*

<<<<<<>>>>>>

*மாவட்டச் செய்திகள்*

நாமக்கல் மாவட்டம் கொல்லிமலை அரசு மருத்துவமனையில் நான்கு கோடி ரூபாய் செலவில் புதிய கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை மாநில அமைச்சர் திரு மதிவேந்தன் இன்று தொடங்கிவைத்தார்.

---------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் நடைபெற்றுவரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாநில அமைச்சர் திரு சேகர்பாபு இன்று பார்வையிட்டார்.

---------------

திருப்பத்தூர் மாவட்டத்தில் இரண்டு மாதங்களுக்கு பிறகு மாற்றுத்திறனாளிகளுக்கான முகாம் ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இன்று நடைபெற்றது.

----------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறையை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின்

*பிரதிநிதிகள் முன்னிலையில் ஆட்சியர் திருமதி சந்திரகலா இன்று ஆய்வு செய்தார்.*

-------------

*பிரதமரின் விவசாயிகளுக்கான வருவாய் ஆதரவுத் திட்டத்தின்கீழ் புதுக்கோட்டை மாவட்டத்தில் 88 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பயனடைந்து வருவதாக ஆட்சியர் திருமதி அருணா கூறியுள்ளார்.*

-------------

*திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் ஆட்சியர் திரு சரவணன் தலைமையில் இன்று நடைபெற்றது.*

-------------

*மதுரையில் போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிராக மாணவர்கள் பங்கேற்ற பேரணி இன்று நடைபெற்றது.*

-------------

*நாகை மாவட்டம் வேளாங்கண்ணியில் உள்ள புனித ஆரோக்கிய மாதா திருவிழா வரும் 29-ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்குகிறது. அன்றைய தினம் அம்மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.*

*<<<<<<>>>>>*

***விளையாட்டுச் செய்திகள்***

*ஆசிய துப்பாக்கிச்சுடும் சாம்பியன் போட்டியில் இந்தியா இன்று 2 தங்கம், 2 வெண்கலப் பதக்கங்களை வென்றது.*

*கஜகஸ்தானின் Shymkent-ல் நடைபெற்றுவரும் இப்போட்டியின் மகளிர் 10 மீட்டர் பிரிவில் Elavenil Valarivan தங்கப்பதக்கம் வென்றார்.*

*கலப்பு இரட்டையர் பிரிவில் HARMEHAR LALLY- YASHASVI RATHORE இணை தங்கப் பதக்கம் வென்றது.*

*ஆடவர் மற்றும் மகளிர் குழு பிரிவுகளில் இந்தியாவுக்கு வெண்கலப்பதக்கம் கிடைத்தது.*

*இப்போட்டியில் இந்தியா இதுவரை 18 தங்கம், 8 வெள்ளி, 9 வெண்கலப்பதக்கங்களுடன் பதக்கப்பட்டியலில் முதலிடத்தில் உள்ளது.*

---------------------

*உலக இளையோர் வில்வித்தை சாம்பியன் போட்டியில் இந்தியா ஆடவர் மற்றும் கலப்பு குழு பிரிவுகளில் இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.*

*கனடாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் அரையிறுதி ஆட்டங்களில் இந்தியா, 18 வயதுக்கு உட்பட்டோருக்கான கலப்பு குழு பிரிவில் ஸ்பெயினையும், 21 வயதுக்கு உட்பட்டோருக்கான ஆடவர் குழு பிரிவில் கொரியாவையும் வென்றது.*

------------------

*17 வயதுக்கு உட்பட்டோருக்கான தெற்காசிய மகளிர் கால்பந்து சாம்பியன் போட்டியில் இந்தியா 2-0 என்ற கோல் கணக்கில் பங்களாதேஷை வென்றது.*

*பூட்டானின் திம்புவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் இரண்டாவது ஆட்டத்தில் Pearl மற்றும் Bonifilia தலா ஒரு கோல் அடித்தனர்.*

-------------

*தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் சித்தார்த் ராவத் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.*

*<<<<<<END>>>>>*